"இனி தனித்து நின்று போராடும் திறம் அறியோம்"

Phone No 4502

Regd. No. M. 5456

விலை அரை அணா

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (5—5—50) வெளியூர் (6—5—50) [இதழ் 244

"ஆதரவு தராவிடில் அழிந்துவிடுவோம்"

இந்தோ-சீனாவின் எழுச்சி கண்டு பிரான்ஸ் கலக்கம்

—(0)—

அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடம் அடைக்கலம் புக திட்டம்

1. "இந்தோ-சீனாவில் வளர்ந்துவரும் கம்யூனிசத்தைப் பிரான்ஸ் மட்டுமே தனித்து நின்று இனி சமாளிக்க முடியாது.

2. லண்டனில் நடைபெறும் மாநாட்டில், செய்கோன், சிங்கப்பூர், இரங்கூன் முதலிய இடங்கள் முக்கியமான இடங்கள் என்று அமெரிக்கர்களால் கருதப்படும் தென்கிழக்கு பசிபிக் பகுதியில் இந்த இடங்கள் பாதுகாப்பிற்குரிய இடங்களென்றும், இவற்றைக்கைவிட்டால் அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளுக்கு அல்லல் ஏற்படக்கூடும் என்பது வலியுறுத்தப்படும்.

3. அமெரிக்கா இவ்விஷயத்தில் பங்கு கொள்வதாயிருந்தால் அஃதோர் உருப்படியான பணியைச் செய்தாக வேண்டும்."

இந்தோனேஷியாவில் பிரஞ்சுஹைகமிஷனராகவிருக்கும் தோழர் லியோன் பிக்னன் தற்போது பிரஞ்சு அயல்நாட்டு அமைச்சருடன் ஆலோசனை நடத்தி வருகிறார். அந்த ஆலோசனையின்போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று முக்கிய விஷயங்கள் வற்புறுத்தப்படுமென்று சொல்லப்படுகிறது.

அடுத்த வாரம் லண்டனில் அமெரிக்க, பிரிட்டிஷ், பிரஞ்சு நாடுகளின் அயல் நாட்டு அமைச்சர்கள் மாநாடு நடைபெறும். அப்போது இந்தோனேஷியாவில் பிரஞ்சு சர்க்கார் தனித்து நின்று போராட முடியாது; அமெரிக்க-பிரிட்டிஷ் உதவி அவசியம் தேவைப்படும் என்பதை, வெளிப்படையாக விளக்கிக் கூறி அமெரிக்க-பிரிட்டிஷ் உதவியை நாடியே தீருவதென்று பிரான்ஸ் முடிவு செய்து விட்டதாம்.

அமெரிக்க, பிரிட்டிஷ் படை பலம்மட்டும் இருந்தால் போதாதென்றும், 50 கோடி டாலர் பொருளுதவியும் தேவைப்படுமென்றும் சில பிரஞ்சு அதிகாரிகள் கருதுகின்றனர். 1½ கோடி டாலர் உதவி அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுவது மிகவும் வெட்கக்கேடான விஷயம் என்று மற்றொரு பிரஞ்சு அதிகாரி கூறுகிறார்.

பிரஞ்சு யூனியனுக்கு வெளியே அல்லது பிரஞ்சு காமன்வெல்த்துக்கு வெளியே இருந்து வியட்னும் குடியரசு சுதந்திரமாயிருப்பது என்பது இந்தோ-சீனா கிரம்லின் வசம் சிக்க வைப்பதுபோலவேயாகும் என்று, அமெரிக்க தூதுவர் தோழர் பிலிப் ஜெசிப் கூறியுள்ளார்.

இச்செய்திகளிலிருந்து இந்தோ-சீனாவின்நிலையையும், பிரஞ்சு சர்க்காரின் தொடை நடுக்கத்தையும் ஒருவாறு உணரலாம்.

இந்தோ-சீனாவின் கம்யூனிசம் காற்று வேகத்தில் பரவி வருகிறது. இந்தநிலைமையைத் தனித்து நின்று சமாளிக்கும் சக்தி தனக்குக்கிடையாது என்பதை, பிரான்ஸே ஒப்புக்கொள்ளுகிறதென்றால், இந்தோசீனாவில் தோன்றியுள்ள எழுச்சியைவிளக்கவேறென்ன வேண்டும் ?

அடுத்த வாரம் லண்டனில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆசியநாடுகள் மாநாடு கூடப் போகிறதாம். அப்பொழுதுபிரான்ஸ்இந்தோசீனாவில் தனது கையாலாகாத்தனத்தை வெளிப்படையாக அமெரிக்க பிரிட்டிஷ் அதிகாரிகளின் பாதார விந்தத்தில்சமர்பித்து "ஐயன்மீர், அடியேன் பட்டபாடுபோதும்! இனிபட முடியாதரசுகளே! எம்மை ஆட்கொண்டருள தருணமிதுவே!" என்று கெஞ்சப் போகிறது.

இங்ஙனம் கெஞ்சும் படலத்துக்கு உதவி கோருதல் என்ற அழகு முலாம் பூசப்படுகிறது. பூசட்டும். ஆனால் பிரான்ஸ் நம்புகிறபடி அமெரிக்காவும், பிரிட்டனும் ஒத்துழைத்தாலுங்கூட பிரஞ்சுசர்க்கார் ஜம்பம்இனிஇந்தோசீனாவில் செல்லாது என்பது திண்ணம் இன்று இந்தோசீனாவில் தோன்றியுள்ள புரட்சித் தீ அணையக்கூடியதியன்று. முதலாளித்வ ஏகாதிபத்தியங்களை அனைத்தையும் அறவே எரித்தொழிக்காதவரை அத்தீ அணையப்போவதில்லை. அது மட்டுமல்ல; அத்தீயின் பணி இந்தோசீனாவோடு நின்றுவிடக்கூடியதுமல்ல; கிழக்காசியாவில் எங்கெங்கே முதலாளித்வம் ஆதிக்கம்செலுத்துகின்றதோ அங்கெல்லாம்பரவி தனது பணியை ஆற்றவும் உறுதிகொண்டு அப்புரட்சித்தீ பவனி வருகிறதுஎன்றாலும் மிகையாகாது.

உணவுப்பொருள் இறக்குமதி குறைக்கப்பட்டது

சென்ற ஆண்டு இறக்குமதியில் பேர்பாதியே இவ்வாண்டு கிடைக்கும்

புதுடில்லி, மே. 4—

1951 முதல் உணவு சுயதேவை பூர்த்தி லட்சியத்தை அடைவதற்கு முதல் படியாக, இந்தியா இவ்வருஷமே அயல்நாட்டிலிருந்து வரும் உணவு இறக்குமதிகளைக் குறைக்க ஆரம்பித்து விட்டது.

இவ்வருஷம் 1500,000 டன் தான் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதென்று திட்டமிடப்பட்டிருக்கிறதென்றும், இதில், முதல் நான்கு மாதங்களில்500,000 டன் வந்து சேர்ந்து விட்டதென்றும் இந்திய சர்க்கார் உணவு மந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி கூறினர்.

இதுவரை கிடைத்துள்ளதில் 400,000 டன் கோதுமை 32000 டன் அரிசி என்றும், சென்றவருஷம் எவ்வளவு உணவுப் பொருள் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதோ, அதில் பேர்பாதிதான் இவ்வாண்டு வரவழைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் கூறினர்.

இவ்வாண்டு பர்மாவிலிருந்து 100,000 டன் அரிசி கிடைக்கும். இதற்கான பேச்சு வார்த்தைகள் நடந்துமுடிந்துவிட்டன. ஆகஸ்ட் மாதத்திற்குள் இந்த அரிசிகிடைத்துவிடும. இதனுல் இந்தியசர்க்காருக்கு ரூ. 550000000 செலவாகும். இந்த பர்மா அரிசி, இவ்வாண்டு இந்தியாவுக்கு அயல்நாடுகளிலிருந்து கிடைக்கும் மொத்த உணவுப் பொருள் அளவிற்கூட்டப்பட்டதேயாகும்.

பாகிஸ்தானிலிருந்து 150,000 டன் கோதுமை இந்தியா பெறும். இதற்கான பேச்சுவார்த்தைகள் சீக்கிரமே ஆரம்பமாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

பிரகாசம் மீது ஒழுங்கு நடவடிக்கை

வாபஸ் வாங்கப்பட்டது

புதுடில்லி, மே 3—

பண்டித நேருவும், பட்டேலும் கூறிய அறிவுரையின்படி டட்டப்பாக தோழர் பிரகாசம் ஒப்புக்கொண்டதன் பேரில், கடந்த மூன்று மாதங்களாக சென்னை காங்கிரஸ் கட்சியில் இருந்து வந்த தகராறு ஒருவாறு தீர்க்கப்பட்டது.

இன்று கூடிய காங்கிரஸ் செயற்குழு, தோழர் பிரகாசம் மீதும் 14 சட்டசபை உறுப்பினர் மீதும், ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது என்ற தீர்த்த முடிவை வாபஸ் பெற்றுக் கொண்டது.

கடல் நீரிலிருந்து உரேனியம்

நியூயார்க், மே. 4—

கடல்நீரில் கலந்துள்ள உரேனியத்தைப்பிரித்து எடுக்க ஒரு வழியை ச்ரூக்லின் பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூட்டைச் சேர்ந்த டாக்டர் ஹ ரிகிரஹாஸ் என்பவர் கண்டுபிடித்து அமெரிக்க ஐ பன சங்கத்தினருக்கு அறிவித்திருக்கிறார் —நளோர்

பிரிட்டிஷ் ஜவுளி தூதுகோஷ்டிக் குழு

டோஹியோ, மே 4—

பிரிட்டிஷ் ஜவுளி தூதுகோஷ்டி, செவ்வாய்க்கிழமையன்று இங்கு வந்து சேர்ந்திருக்கிறது. ஜப்பானிய ஜவுளி உற்பத்திபோட்டியால் ஏற்படும் கஷ்டங்கள் சில சந்தேகங்கள் முதலியன பேசித் தீர்க்கப்படும் எனத் தெரிகிறது.

கிழக்கு இந்தோனேஷ்யாவில் குழப்பம் நீடிக்கிறது

லண்டன், மே. 4—

கிழக்கு இந்தோனேஷ்யாவில் இன்னும் கலவர நிலைமை நீடித்து வருகிறதென்றும், அம்போய்னா தீவு இன்னும் கலகக்காரர்கள் வசமே இருக்கிறதென்றும் செலிபிஸில் இன்னும் குழப்பநிலைமை இருந்து வருவதாகவும் இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. டுன்காசா என்ற இடத்தின் ராணுவச் சட்டம் அமுலை பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது.

போர்மோஸா விரைவில் தாக்கப்படலாம்!

ஹாங்காங், மே 4—

சீனாவில் ரஷ்ய செல்வாக்கு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறதென்று ஒரு அமெரிக்க ராஜதந்திரி குளோப் நிருபரிடம் கூறினர்.

இவ்வாண்டே போர்மோஸா தாக்குதல் நடைபெறலாம் என்றும் ரஷ்ய விமானங்கள் அதில் முக்கியபங்கெடுத்துக்கொள்ளும் என்றும் அவர் கூறினர்.

ஞாயிறுதோறும் தபால் விடுமுறை

மே 7உ முதல் அமுலுக்கு வரும்

இந்திய சர்க்கார் செய்துள்ள ஏற்பாடுகள்

சென்னை, மே 4—

ஞாயிறுதோறும் தபால் சிப்பந்திகளுக்கு விடுமுறை அளிக்கவேண்டுமென்று, இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ள திட்டம் இம்மாதம 7-ந் தேதி (வருகிற ஞாயிறு) முதல் அமுலுக்கு வருகிறது.

இதை அமுல் செய்வதற்கான சில ஏற்பாடுகளைச் செய்ய இந்திய சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

மே 7-ந் தேதி முதல் ஒவ்வொரு ஞாயிறன்றும் தபால் ஆபீஸ்கள் மூடப்பட்டிருக்கும். அன்று தபால் பெட்டிகளைத் திறந்து கடிதங்களை எடுத்துச் செல்வதுகூட நடைபெருது. பட்டுவாடாவும் கிடையாது.

தாமதக் கட்டணம் செலுத்தினுல் கவனிக்கப்படும்

ஆனால் 'லேட் பீ' ஸ்டாம்பு ஒட்டப்படும் கடிதங்கள் ஆர். எம் எஸ். ஆபீஸ்களிலோ அல்லது ஸ்பெஷல் தபால் பெட்டிகளிலோ போடலாம். அவைமட்டும் சேகரிக்கப்படும்.

எக்ஸ்பிரஸ் டெலிவரிகடிதங்கள் ஞாயிறன்றும், தந்தி ஆபீஸ்கள் மூலம் தபால் தந்தி இரண்டும் உள்ள ஆபீஸ்கள் மூலமும் பட்டுவாடா செய்யப்படும்.

கடிதங்களை ஒரு தபால் ஆபீஸிலிருந்து மற்றொரு ஆபீஸிக்கு அனுப்புவது, ஆர். எம். எஸ்ஸுடன் தொடர்பு கொள்வது முதலியவை, ஞாயிறன்று இப்பொழுது எப்படி அமுல் செய்யப்பட்டு வருகிறதோ அம்மாதிரியே ஜூலை 1-ந் தேதி வரை இருந்துவரும். இதற்குள் கடிதங்களை அனுப்ப விரிவான ஏற்பாடுகள் வகுக்கப்படும்.

ஸ்டாம்பு வாங்க முடியும்

எல்லா ஆர். எம். எஸ். ஆபீஸ்கள் தந்தி ஆபீஸ்களிலும் ஞாயிறன்று ஸ்டாம்புகள் விற்கப்படும். தந்தி பட்டுவாடா செய்யப்படும் தந்தி தபால் கூட்டு ஆபீஸ்கள் ஞாயிறன்று சில மணி நேரம் மட்டுமே திறந்து வைக்கப்படும்.

மாலை மணி

சென்னை 5—5—50 வெள்ளிக்கிழமை

பசுவும் பாம்பும்!

"பல்வேறு மதங்களையும், ஒன்றோடொன்று ஒத்திட்டுப் பார்க்கும் பண்பு, இது நாளில் வளர்ந்திருக்கிறது. குறிப்பாக பௌத்தத்தையும் பிராமணீயத்தையும் ஒத்திட்டுப் பார்த்து ஒற்றுமை, வேற்றுமைப் பண்புகளை ஆராய்கிருர்கள். அப்படிப்பட்ட காலம் இப்பொழுது வந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட மதக் கருத்து, மக்களைச் சமமாகக் கருதும் அடிப்படையில் அமைந்திருக்கிறதா, அல்லது மனிதனுக்கு மனிதன் வேறுபாடு கற்பிக்கும் அடிப்படையில் அமைந்திருக்கிறதா, என்று கண்டறிவது, முக்கிய உரைகல்லாக இருந்து வருகிறது"

என்று அறிஞர் பி. ஆர், அம்பேத்கார், பம்பாயில் நடைபெற்ற புத்தர் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டம் ஒன்றில் பேசும்போது, குறிப்பிட்டுள்ளார்.

அக் கூட்டத்தில், அறிஞர் அம்பேத்கார், பௌத்தத்துக்கும், பிராமணீயத்துக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கிக் காட்டி, பௌத்தமதம் எவ்வளவு உயர்ந்த மாண்புடைக் கருத்துக்களைக் கொண்டிருக்கிறது என்பதையும், பிராமணீயம் எவ்வளவு இழிந்த பாழ்பட்டக் கருத்துக்களைக் கொண்டிருக்கிறது என்பதையும் நன்கு புலப்படுத்தியுள்ளார்.

பிறப்பிலே பேதங் கிடையாது—மக்கள் எல்லோரும் சமம்—எவ்வுயிரிடத்திலும் அன்பாய் இரு—அறமே செய்ய விரும்பு—ஆசையை வளரவிடாதே—உலக வாழ்வில் உள்ள துன்பங்களைப் போக்கு—'கடவுள்—உலகம்' என்ற கற்பனை உலகைப் பற்றிக் கவலைப்படாதே—மக்களுக்குத் தொண்டு செய்ய மறக்காதே என்பன போன்ற அரிய, பெரிய, சீரிய, அவசியமான, வாழ்வுக்கு உறுதி தரும் கருத்துக்களைக் கடைபிடிக்கச் சொல்லுகிறது பௌத்தம்!

பிறப்பிலே பேதம் உண்டு—அந்தப் பேதம் சமுதாயத்தை நான்கு வர்ணங்களாகப் பிரிக்கின்றது—பிரிவுக்குப் பிரிவு, உரிமையும், அதிகாரமும், ஆதிக்கமும், வேறுபடும்—ஆசையை 'பிராமணர்கள்' மட்டுமே வளர்த்துக் கொள்ளலாம்—'பிராமணர்கள்' மட்டுமே வாழப் பிறந்தவர்கள், மற்றவர்கள் அவர்களுக்குப் பணிவிடை புரியத் தோன்றியவர்கள்—உலக வாழ்வைவிட கடவுள் வாழும் கற்பனை வான உலகமே எல்லா வகையிலும் சிறந்தது—உலக வாழ்வை வெறுக்க வேண்டும்—கடவுளின் கற்பனை உலகை விரும்பவேண்டும்—சூத்திரர்கள் குற்றேவல் புரிந்து, உரிமை எதையும் வேண்டாது நரகத்திற்குப்போய்ச் சேரவேண்டும்—'பிராமணர்கள்' பிறர்கொடுக்கும் தான தருமங்களைப் பெற்று, இன்பம் நுகர்ந்து, மேலுலகம் போய்ச் சேரவேண்டும், இன்னோரன்ன கொள்கைகளைப் போதித்து, மக்களை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தி வருவது பிராமணீயமாகும்!

மனிதனுக்கு மனிதன் பேதம் உண்டு என்கிறது பிராமணீயம்; மனிதனுக்கு மனிதன் பேதம் கிடையாது என்கிறது பௌத்தம். இதில் எது சிறந்தது என்று கண்டறிவதே இற்றைக் காலத்தின் சிறந்த முயற்சியாக இருந்துவருகிறது என்று கூறுகிருர் அறிஞர் அம்பேத்கார் மக்களைச் சமமாக நடத்தும் மதம் எது, சமமாக நடத்தாத மதம் எது என்ற உரைகல்லைக் கொண்டு ஆராய்ந்தால், புத்த மதம் எத்துணையளவு சிறந்த மதமாக விளங்குகிறது என்பது விளங்கிவிடும் என்பதைக் குறிப்பால் உணர்த்திக் காட்டியுள்ளார் அறிஞர் அம்பேத்கார்

பௌத்தம் தோன்றியதற்கு மூலகாரணமாக இருந்தது பிராமணீயமேயாகும். பௌத்தம் புத்தரால் தோற்றுவிக்கப்பட வேண்டிய அளவுக்கு, பிராமணீயம் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தி, கொடுமைகள் புரிந்து, சமுதாயத்தைச் சித்ரவதை செய்து சீரழித்துக் கொண்டிருந்திருக்கிறது, பிராமணீயத்தால் ஏற்பட்ட சமுதாயக் கொடுமைகளைத் தகர்த்தெறியவே, புத்தர் புதிய—புரட்சிக் கொள்கைகளைக் கண்டார். அவைதான் பௌத்தம் என்று அழைக்கப்படுகின்றன. முதல் சமுதாயப் புரட்சியை இந்தியத் துணைக் கண்டத்தில் உண்டாக்கியவர் 2494 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கௌதம புத்தரேயாவார். புரட்சியில் வெற்றியும் கண்டார். அவரது புகழொளி ஆசியாக் கண்டம் முழுதும் பரவி நிற்கத் தலைப்பட்டது. காரணம் பௌத்தத்தில் பொதிந்து கிடக்கும் சீரிய உயர்ந்த கொள்கைகளேயாகும்.

பௌத்தமும்—பிராமணீயமும், கீரியும்—பாம்பும் போல, பகையோடுதான் வளர்ந்து வந்தன, பௌத்தத்தின் வளர்ச்சி, பிராமணீயத்தின் வீழ்ச்சியாக இருந்தது. அதனுலதான் பௌத்தத்தை எவ்வகையிலேனும் அழித்துவிட வஞ்சக பிராமணீயம் அல்லும் பகலும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகப் பாடுபட்டது. பௌத்தம் நேரிய வழியைப் பின்பற்றியது; பிராமணீயம் வஞ்சக வழியைக் கடைப்பிடித்தது. உண்மை-அன்பு-அறிவு இவைகள் பௌத்தத்தின் ஆயுதங்களாக விளங்கின. வஞ்சகம்—சூது—சூழ்ச்சி—பொறாமை இவைகள் பிராமணீயத்தின் ஆயுதங்களாக விளங்கின. இறுதியில் பௌத்தம் வஞ்சக பிராமணீயத்தால் இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டும் அழிக்கப்பட்டுவிட்டது!

வரலாற்றின் அழகிய நல்ல பகுதிகளையெல்லாம் பிராமணீயம் தன் கோர நச்சுப் பற்களால் தீண்டி, அவைகளைக் கருக வைத்துத்தான் வந்திருக்கிறது!

பௌத்தத்தையும், பிராமணீயத்தையும் ஒத்திட்டுப் பார்த்தால், பிராமணீயம் செய்த கொடுமைகள் தெள்ளத் தெளிய விளங்கும் என்ற கருத்துப்படதான், அறிஞர் அம்பேத்கார் புத்தர் பிறந்த நாள் விழாவில், அலசிக் காட்டுகிருர். பௌத்தம் எவ்வளவு அன்புடையது, பிராமணீயம் எவ்வளவு கொடுமை வாய்ந்தது என்பதை மக்கள் தெளிவுபடுத்திக்கொண்டு, நல்லதன் வழிப்பட முயன்றிருப்பார்களேயானுல், எவ்வளவோ நாட்களுக்கு முன் பிராமணீயம் அழிந்திருக்கும்; பௌத்தம் செழித்து வளர்ந்தோங்க ஆரம்பித்திருக்கும்.

பௌத்தத்தைப் பசு என்ருல், பிராமணீயத்தைப் பாம்பு என்றுதான் பகரவேண்டும்! பசு பால் கொடுக்கும்; பாம்பு விஷம் கக்கும்! பசு நன்மை பயக்கும்; பாம்பு கொடுமை விளைக்கும்! பசு உயிரைக் காப்பாற்றும்; பாம்பு உயிரைப் போக்கும்! பசு அன்புடன் பழகும்; பாம்பு சீறிப்பாயும்!

பௌத்தம் பசுவால் ஏற்படும் நலன்களை மக்கள் அடைய வொட்டாமற் செய்ய பிராமணீயப் பாம்பு, அந்தப் பசுவைத் தீண்டிவிட்டது—பசு சாய்ந்துவிட்டது. விஷம் இறக்கப்பட்டால், பசு எழுந்திருக்கவும் கூடும்! ஆகவேதான் அறிஞர் அம்பேத்கார் இரண்டிற்குமுள்ள வேறுபாட்டையுணர்ந்து அடிக்க வேண்டிய பாம்பை அடித்து, வளர்க்க வேண்டிய பசுவை வளர்க்கும்படிக் குறிப்பால் உணர்த்துகிருர்!

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஜினிவா, மே, 4—

"தனிப்பட்டவர்களும் சரி, தேசங்களும் சரி ஒத்துழைப்பட்டு வாழவை தெரியாவிட்டால் மனித வர்க்கமே அழியவேண்டியதுதான் என்று ரஷ்யாவும், காமின்பாரம் நாடுகளும் ஒத்துழைக்காதிருக்கும் மனப்பான்மையைக் குறிப்பிட்டு உலக சுகாதார ஸ்தாபன டைரக்டர் ஜெனரல் டாக்டர் ப்ருக் சிஸ்லோம் தன் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிருர்.

மனிதன் சௌக்யமாகவும், சந்தோஷமாகவும் வாழ ஓரே உலக கொள்கைதான் அடிப்படை என்றும், இதை காமின்பாரம் நாடுகள் உணரவில்லை என்றும் அவர் கூறியிருக்கிருர்.

காமின்பாரம் நாடுகள் விலகிவிட்டதால், இப்பொழுது உலக சுகாதார ஸ்தாபனத்தில் 61 நாடுகளே மெம்பராக இருக்கின்றன.

பிரிட்டிஷ் போர் அமைச்சர் மலேயா வருகை

சிங்கப்பூர், மே 4—

பிரிட்டிஷ் யுத்த மந்திரி தோழர் ஜான் ஸ்ட்ராட்சி, காலனி மந்திரி கிரிபித்ஸுடன் மலேயாவுக்கு விஜயம் செய்ய விருக்கிருர் என்று ருனோப் கிருபர் கூறுகிருர்.

இப்பொழுது மலேயாவில் மட்டும் 20,000க்கு மேற்பட்ட பிரிட்டிஷ் துருப்புகள் இருக்கின்றன.

மலானின் மண்ணாசை

தலைகாட்ட அஞ்சுகிறது

லண்டன், மே. 4—

ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் பாதுகாப்பு நாடுகளாக புசுவானலாந்து, பஸுடோலாந்து, ஸ்வாஸிலாந்து முதலியவைகளை தென்னுப்பிரிக்க யூனியனுடன் இணைத்துக் கொள்வதை, இப்பொழுது எழுப்ப உத்தேசமில்லை என்பதை மலான் வெளியிட்டிருக்கிருர்.

இதற்காக தருணம் வாய்க்கவில்லை என்பதை, மலான் நன்கு உணர்ந்திருக்கிருர் என்றே இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

நிரந்தர பலமுள்ள பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்பட்ட பின், தன காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்று மலான் நினைத்துக் கொண்டிருந்தால், அவர் வீணுக ஏமாந்து போக நேரிடும் என்று இங்குள்ள அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஆப்பிரிக்கர்கள் விஷயத்தில் தங்கள் கடமையும், பொறுப்பையும் நிறைவேற்றுவதில் பிரிட்டிஷ் கட்சிகளுக்கிடையே அபிப்பிராய பேதம் எதுவும் கிடையாது என்பதை இந்த வட்டாரத்தினர் எடுத்துக் கூறுகின்றனர்.

சுதேசிகளின் நலன் பாதிக்கப்படாதபடி பிரிட்டன்பார்த்துக்கொள்ளும் என்றும், அப்பிரதேசத்தைத் "தன்னுடன் இணைத்துக் கொள்வதில் மலான் மிகவும் அக்கறை கொண்டிருந்தால், அப்பிரதேசத்திலுள்ள மக்கள் மனதை மாற்றுவதில் மலான் முயற்சி செய்யவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

லண்டன் தெருவில் வெடிகுண்டு

லண்டன், மே, 4—

லண்டன் தெருவு ஒன்றில் சில குழந்தைகள், விசித்திரமானதுள்ள புட்டிபோன்ற பொருள் ஒன்றை வைத்துக் கொண்டு விளையாடிக்கொண்டிருந்தனர். நல்லகாலமாக ஒருவர் அதை வெடிகுண்டு என்று தெரிந்துகொண்டு, குழந்தைகளை எல்லாம் அப்புறப்படுத்தினர்.

யுத்தகாலத்தில் வீசப்பட்ட குண்டு இத்தனைநாள் எங்கேயோ மறைந்து கிடந்து இப்பொழுது இக்குழந்தைகளின் கையில் அகப்பட்டிருக்கவேண்டும் எனத் தெரிகிறது. —ருளேன்

எஞ்ஜின் டிரைவர்கள் வேலை நிறுத்தம்

ஸ்டாக்ஹோம், மே 4—

பின்லாந்தில் நடைபெறும் எஞ்ஜின் டிரைவர்கள் ஸ்டிரைக் நாட்டின் போக்குவரத்து நிலைமையே பாதிக்கும் நிலைமை ஏற்பட்டதால், துருப்புகளைக்கொண்டு நிலைமையைச் சமாளிக்க முயற்சி செய்யப்பட்டதாக செய்தி கிடைத்திருக்கிறது.

சம்பள உயர்வு கோரி அது கவனிக்கப்படாததாலேயே இந்த ஸ்டிரைக் ஆரம்பமாயிற்றும். ஸ்டிரைக் இவ்வாரத்திற்குள் முடிவடையுமா என்பது எதுவும் சொல்வதற்கில்லை.

இனி நடப்பவை

கிழச்சந்தைப்பேட்டை:- 7-5-50 மாலை 6-மணிக்கு திராவிட முன்னேற்ற இளைஞர் மன்றத்தின் திறப்புவிழா, தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெறும். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி திறந்து வைப்பார். தோழர் கே. எஸ். ராஜ மான் கொடியேற்றுவார். தோழர் எம். அப்பாசாமி மற்ற தோழர்களும் சொற்பொழிவாற்றுவர்கள்.

* * *

சென்னை, அமைன்புரம்:—'குமரி' தமிழன்னை நாடக மன்றத்தின் செயற்குழுக்கூட்டம் 6.5.50 மாலை சமூக மனையில் நடைபெறும். தோழர் எம். சண்முகசுந்தரம் தலைமை வகிப்பார்.

* * *

குன்னூர், இவலூர் பேட்டை:- 7—5—50 மாலை 2-30 மணியளவில் மே தின விழா நடைபெறும். அதுபோது தோழர் எஸ். ஆர். சுப்பிரமணி, அவர்கள் தலைமை வகிப்பார் தோழர்கள் ஈ. வே. கே. சம்பத், ஜி.என். இராசு சொற்பொழிவாற்றுவர்.

* * *

சங்கரன்கோவில்:— தி. மு. க. செயற்குழு 7-5-50-ல் 64.7 என் இல்லத்தில், பொதுக்கூட்டம்நடந்த வரவு செலவு கணக்கு, மற்றும் தோழர் மு. கருணாநிதி அவர்களைக் கொண்டு விரைவில் பொதுக்கூட்டம் நடத்துவதுபற்றியும் பல தீர்மானங்களும் நிறைவேற்றவேண்டியிருப்பதால் அனைவரும் வரவேண்டப்படுகிருர்கள்.

* * *

வாலாஜாதாலுக்கா: திருக்குறள் பிரசாரக் குழுவினரான தோழர்கள் மாணவமணி, தரைசாமி புலவர்,ஆ.மணிஎழிலன்புலவர்,து. இளங்குமரனுர் ஆகியோர் பல ஊர்களில் திருக்குறள் பிரச்சாரம் செய்துவிட்டு மீண்டும் தொடர்ந்து,மே6-ம் தேதி காட்டுக்காரனூர், 7 காவேரிப்பாக்கம், 8 இராணிப்பேட்டை, 9 சேத்தப்பாக்கம், வாலாப்பேட்டை ஆகிய ஊர்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

* * *

சோலை:—7—5—50 காலை 10 மணிக்கு நகர திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில், சொற்பயிற்சி மன்றம் கூடும். அதுபோது பல தோழர்கள் "சேர்ந்த இன்று, நாளை" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்கள்

* * *

பொன்னரசி:—7—5—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணி அளவில் நகர தேர் நிலை வெளியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் எம். எஸ். சிவசாமி, இரா. க. தங்கப்பரும் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

முசிறிதாலுகா:— ஆமூர் போர்டு எலிமெண்டரி பாடசாலை பெற்றோர் சங்க முதலாவது ஆண்டு விழா, 7-5-50-ல் தோழர் பி. வி. கே. இராசசிதம்பரம் அவர்கள் தலைமையில் இராமர் சாவடியில் நடைபெறும். தோழர் டி. கே. இராஜகோபாலன் அவர்கள் காலை கொடியேற்றுவிப்பார். தோழர் ம. அப்பாவு அவர்கள் சொற்பொழிவாற்றுவார். பள்ளி மாணவ மாணவிகளால் நிலாவியும், தரோவியும் என்னும் நாடகம் நடிக்கப்பெறும்.

* * *

செண்பகராயநல்லூர், கரிவலம் பட்டினம்:— தி. மு. க. கிளையின் சார்பில் 7-5-50 மாலை 6 மணிக்கு கரிவலம்பட்டினம் புளைகண்டி நிலையத்திற்கு வடபுறம், தோழர் கே. கே. ஷாஜாபீ அவர்கள், தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும். அவ்வமயம் தோழர் டி. கே. சீனிவாசன், தோழர் கி. பி. சித்ரரசு ஆகியோர் சொற்பெருக்காற்றுவார்கள்.

ஸ்டார்லிங் கடனைக் கணக்குக் காட்டி வெள்ளை முதலாளிகளை ஒழித்து கட்டுக

காப்பி தேயிலை தோட்டங்கள் உடனே தேசியமயமாக்கப்படவேண்டும்

உற்பத்தி பெருக்க உழைத்தவனுக்குக் கைமாறு என்ன?

—————(0)—————

முதலாளிகளின் முன் ஓடும் பிள்ளைகளாக சர்க்கார் ஏன் நடக்கவேண்டும்?

—————(0)—————

அண்ணாத்துரை அவர்கள் மே தினச் சொற்பொழிவின் தொடர்ச்சி

(நேற்றையத்தொடர்ச்சி)

இந்தியாவுக்குப் பிரிட்டன் தரவேண்டிய ஸ்டார்லிங் கடனை காட்டி, தேயிலைத்தோட்ட வெள்ளை முதலாளிகளுக்குக் கணக்குக்காட்டி, நாட்டைச் சுரண்டவந்து குவிந்துள்ள அன்னியரை உடனே வெளியேற்ற வேண்டுமென்று மே தின விழாவில் தோழர் சி என். அண்ணாத்துரை அறிவித்தார்.

உற்பத்தியைப் பெருக்கியும், தொழிலாளர் விலங்குகள் போல் வாழவேண்டிய நிலை இருப்பதால், தொழிலாளரின் நலன் காக்க, சர்க்கார் முதலாளிகளின் முன்னேடும் பிள்ளைகளாக இராமல் ஆவன செய்ய வேண்டுமென்றும் அவர் கூறினார்.

பலாத்காரத்தில், நாசவேலையில் நமக்கு நம்பிக்கை இல்லை; செய்யச் சக்தி இல்லையென்று கூறவில்லை. இரவு 12மணிக்கு மேல் கொஞ்சம் தூக்கம் வராமல் இருக்கவேண்டும்; காவல் காக்கும் போலீசார் தூங்கி விடவேண்டும்; கவிழ்த்துவிடலாம் எந்த ரயிலையும். கவிழ்த்துவிட்ட ரயிலை அந்நியனிடம் கடன் வாங்கினலொழிய, நிமிர்த்தமுடியாத நிலையில் இருக்கிறோம். அதனுல்தான் நாங்கள் நாசவேலையில் ஈடுபடவில்லை. இதனுல் கம்யூனிஸ்டுகள் நம்மை சந்தேகிக்கிருர்கள். சர்க்கார் சந்தேகிக்கிருர்கள்; முதலாளிகள் சந்தேகிக்கிருர்கள், பத்திரிக்கைகள் இருட்டடிப்பு செய்கின்றன; என்ருலும் நாம் அவர்கள் எதிர்பார்ப்பதை விட வேகமாகவே வளர்ந்து வருகிறோம்.

எது நாகரீகம்?

பரமக்குடியில்பேசும்போது தோழர் காமராஜ்கூறினராம், உழுபவனுக்கு நிலம் சொந்தமானல், அறிவாள் வைத்திருப்பவனுக்குக் கதிர் சொந்தம்; கோணி வைத்துக்கொண்டிருப்பவனுக்கு நெல் சொந்தமாகிவிடாதா என்று; ஆகையால் உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று கூறுவதெல்லாம் "வீண்பேச்சு" என்று கூறினராம். எப்படியிருக்கிறது அவருடைய விளக்கம்!

உற்பத்தியைப் பெருக்குங்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று ஓயாமல் எவ்லோரும் பேசுகிருர்கள். உற்பத்தி நாட்டில் பெருகாமலா இருக்கிறது? நாம் என்ன உண்ணுமலா, உறங்காமலா இருக்கிறோம்? யார் சொல்லி உற்பத்திப் பெருக்குகிறோம்? கிணற்றைத் தோண்டு என்று சொன்னல் ஆணி கொண்டு முடியாது. அந்த உபயோகித்தால் கையில்தான் ரணம் உண்டாகும். அழுத்திப்பிடிக்கும் காரணத்தால் கடப்பாறை இருந்தால் ஏதோ கஷ்டப்பட்டுத் தோண்டி முடிக்கலாம், விரையில், எளிதில் தோண்டி முடிக்க வேண்டுமானல் இயந்திரம் வேண்டும்; விஞ்ஞான முறைகளை மக்கள் உணர்ந்தால்தான் உற்பத்திப் பெருக வழியுண்டு; நாகரீக மென்பதின் பொருள் மிருகத்தை விடக் குறைவாக வேலை செய்து மனிதன் அதிகப்பயன் பெறவேண்டும். புலிகூடத்தான் காட்டில் மான் போன்ற பிராணிகளை வேட்டையாடி உயிர் வளர்க்கிறது. பக்கிங்காம் கர்னுடிக் மில் தொழிலாளி அயர்ந்து தூங்கும் தன மனைவியையும் எழுப்ப மனமில்லாமல், காலை 6 மணிக்கு மனிதனுக ஆலைக்குள் சென்று இருட்டியபின், மாஜி மனிதனுக வெளியேவந்தால் அவன் மனிதன் ஆவானு? கோழியோடு எழுந்திருந்து கோட்டானேடு தூங்குகிறன்தொழிலாளி, உழைத்துப் பயன் காணுத மக்கள்; ஆடையில்லாத மக்கள், இவர்களுக்கு உற்பத்திப் பெருகினுல் மட்டும் போதுமா?

உற்பத்திப் பெருகுகிறது

பயிருக்குத்தான் தண்ணீர் இறைக்கிருர்கள். அந்த நீர் புல்லுக்கும் சென்று பாய்வதை அவர்கள் தடுக்க முடியுமா? காகிதமோ என்று சந்தேகிக்கக்கூடிய 200 நெம்பர் துணி சேலத்தில் தொழிலாளி நெய்கிறன்; ஆனல் அவனுக்கு உடுத்திக்கொள்ளக் கிடைப்பது 20 நெம்பர் துணிதான். நான்கடுக்கு மாடி கட்டுகிறன், ஆனல் அவன் வசிப்பது ஊர்ந்து உள்ளே செல்லவேண்டிய வாயலுள்ள குடிசை. 8000 வகை நெல் நாட்டில் பயிராகிறது. ஆனல் பயிரிடும் விவசாயிக்கு உண்ணக் கிடைப்பது வரகோ, சாளமோதான். உற்பத்தி பெருகினுல் மட்டும் அவனுக்குப் போதுமா? தேவைக்கேற்றவசதி, சக்திக்கு ஏற்ற உழைப்பு முறைபடி வகுக்கப்படவேண்டும்.

அதிக வேலை செய்தால் மாட்டுக்குக்கூட அதிக கவனம் செலுத்துகிறோம். தொழிலாளிகளுக்கு அதுகூடக்கிடையாது. மேனி கருக்க உழைக்கிருன்; அவன் உற்பத்தியைப் பெருக்காவிட்டால் நமக்கு கிடை ஏது? அதிக அளவில் பெருகிய சென்னை மக்களுக்கு வீடு ஏது? பிர்லாவின் பணப்பை எப்படி நிரம்பிற்று? நாட்டில் சிலநாளும் நகரில் சிலநாளும் மிட்டாதார்கள் எப்படி வாழ்க்கை நடத்துகிருர்கள்? இவ்வாறு உழைத்த தொழிலாளி சாதாரண உரிமைகள் கேட்கப்பட்டால் கூடச் சுட்டுத்தள்ளப்படுகிருன். இது நாகரீக சர்க்கார் செய்வாதா? பண்டித நேரு சொன்னுலும், சொல்லாவிட்டாலும் உற்பத்திப் பெருகிக் கொண்டுதான் இருக்கிறது.

நேரு திருந்துகிருர்!

உத்திரப்பிரதேசத்தில் உற்பத்தியைப் பெருக்கினர்கள்; சென்னையில் அரிசியில்லையென்று நாம் மத்திய சர்க்காரைக் கேட்டோம், உத்திரப் பிரதேசத்தை உபரியை அனுப்பு என்று மத்திய சர்க்கார் கூறிற்று. 108 லட்ச ரூபாய் அதிகம் வாங்கிக்கொண்டார்கள் சென்னையிடமிருந்து, இது சர்க்காருக்குச் சர்க்கார் நடத்தும் கள்ளமார்க்கெட் வியாபாரம்!

அறிஞர் பெர்னுட்ஷா முதலாளிகளைப் பற்றி வேடிக்கையாகக் கூறினர்; வெண்ணை விற்றுக்கொண்டிருந்த முதலாளியைப்பார்த்து, ஏனப்பா சுண்ணும்பு விற்ருல் அதிக லாபம் கிடைக்குமே என்று கூறினுல், உடனே சுண்ணும்பு வியாபாரம்செய்ய ஆரம்பித்து விடுவானென்று; லாபம் தான் அவர்களுடைய முக்கிய குறிக்கோள். நம் சர்க்கார், நேரு சர்க்கார், அபேத வாதத்தில் அதிக நம்பிக்கை கொண்டுள்ள சர்க்கார்; எல்லோரும் இன்னுட்டு மன்னர் என்று கூறும் சர்க்கார், முதலாளிகளை விடமாட்டார்கள், முதலாளிகள் லாபத்தைவிட மாட்டார்கள். நேரு கூறினர், 'முதலாளிகள் லாப நோக்கத்தை விட்டுவிடவேண்டுமென்று' விடவில்லைஅவர்கள், சாஸ்திர இதிகாசங்கள் கூறியவைகளையே அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லையே, இவர் கூறியவற்றையா எடுத்துக் கொள்ளப்போகிருர்கள்! எடுத்துக்கொள்ளாதது மட்டுமல்ல நேரு திருந்தி வருகிருர் தங்கள் பக்கம் இப்போது என, முதலாளிகள் கூறுகிருர்கள்.

திறமைசாலிகளுக்குப் பஞ்சமா?

தொழில்களை எடுத்து நடத்த திறமைமிக்க ஆட்கள் இல்லையென்று கூறுகிருர் சர்தார் பட்டேல். இச்செய்தியை அமெரிக்காவில் பத்திரிக்கைகளில் படித்தால் என்ன நினைப்பார்கள்? பாட்டாளிகள் பதைபதைக்க, முதலாளிகள் பூரி பெய்தும்படி திறமை இல்லை என்று கூறுகிருர் தோழர் பட்டேல்; பணம் இல்லையென்கிருர் நேரு, நேரம் இல்லையென்கிருர் முக்கர்ஜி; சம்மூரில்உள்ள தோழர் காமராஜர் கூறுகிருர் தேர்தலுக்குப் பிறகு பார்த்துக்கொள்வோம் என்று

நாட்டில் உண்மையில் திறமைசாலிகளுக்குப் பஞ்சமா? சட்டமந்திரியாகக் கொடுத்திருக்கிறது தோழர் அம்பேத்காரை அவர் ஒரு காங்கிரஸ்காரரல்ல; தென்னுடு கொடுத்திருக்கிறது நிதிமந்திரி டாக்டர் ஜான்மத்தாய் அவர்களை. சட்டம் நிலைத்திருக்கவேண்டியதாயிற்றே அதுவாவது நன்ருக இருக்கட்டுமென்றுதான், நாடு அம்பேத்காரைத் தந்துள்ளது. இன்னும் தொழில் நடத்த நம்மிடம் தோழர் ஜி. டி. நாயுடு இல்லையா? விவசாயத்துக்கு தோழர் சௌந்திரபாண்டியன் இல்லையா? தெரியாது மந்திரிகளுக்கு, அவர் விவசாயத் துறையில் கண்டுள்ள நூதன முறைகள்.

நாடு பிரியவேண்டும்

ராஜாஜிகூட ஏர் உழுதார்; உற்பத்தியைப்பெருக்க இவ்வளவு உதவுகிருரே என்று கூட நான் சந்தோஷப்பட்டேன். அதுவும் பரம்பரை பரம்பரையாகச் செய்யாத தொழில் தோழர் ஆச்சாரியார் செய்கிருரே என்று ஆச்சரியப்பட்டேன். அவர் ஏர் உழுவதாக எடுத்துப்போடப் பட்டிருந்த புகைப்படத்தைப் பார்த்தால், அவருடையகாலில் செருப்பு அணிந்துகொண்டிருந்தது தெரிந்தது! செருப்புப் போட்டுக்கொண்டு உற்பத்தியைப் பெருக்க நினைக்கும் எவனும் ஏர் உழமாட்டான்! கவர்னர் ஜெனரல் ஏர் உழுமுன் 10 அவுன்ஸ் அரிசி, அதன் பின்பு 8 அவுன்ஸ் ஆகிவிட்டது!

சர்க்காருக்கு ஒருஎச்சரிக்கை அடுத்த மே தினம் வருவதற்குள் நம் நாட்டில் வெள்ளை முதலாளிகள் கையில் உள்ள தேயிலை, காப்பித் தோட்டங்களைத்தேசிய மாக்கி,ஸ்டார்லிங் கடனைக் கணக்குப் பார்த்து அவர்களுக்குச் சேரவேண்டியதைக் கொடுத்துவிட வேண்டும். சுரண்டல் நிலையை மாற்ற ஆவன செய்ய வேண்டும். தென்னுடு சுரண்டப் படுவதைத் தடுக்க வடநாட்டிலிருந்து தென்னுட்டைப் பிரிக்க வேண்டும்.

வெட்கப்படக் கூடியதாகும்

அமெரிக்க நாட்டில் முதலாளிகள் யார் யார் என்று தெரியும். பிரிட்டனிலும், இந்தியா ஆகியமற்ற இருநாடுகளிலும்தான், பணக்காரர் பெயர்கள் அமெரிக்கருடன் போட்டியிடுகின்றன. வேறுஎந்த நாட்டிலும் பணக்காரர்கள் யார் யார் என்று யாருக்கும் தெரியாது. அமெரிக்க முதலாளிகளுக்கு உலக மார்க்கெட், பிரிட்டனுக்குக் காமன்வெல்த் நாடுகள் மார்க்கெட், இந்திய முதலாளிகளுக்கு இமயமுதல் குமரிமுனைவரை இருக்கவே இருக்கிறது சுரண்டுவதற்கு!

சர்க்கார், முதலாளிகளுடன் போட்டியிடப் பயப்படுகிறது; அதை மறைக்கவேறு பார்க்கிறது. மறைப்பதால் புண் புரையோடிவிடுமேதவிர புண் ஆறிவிட மாட்டாது. முதலாளிகளின் முன்னேடும் பிள்ளையாக சர்க்கார் இருப்பது வெட்கப்படக்கூடியதாகும்.

உழைப்புக்கு ஏற்ற வசதி தொழிலாளருக்குக் கொடுக்கப்படவேண்டும். உற்பத்திப் பெருக்கம்தரகர்களால் பயனற்றதாகக் கூடாது. துப்பாக்கிக் கொடுமையைவிட டெலிபோன் மிகக் கொடிது. டெலிபோன் எடுத்து ஒரு முதலாளி ஒரு வார்த்தைக் கூறுவானுல், சரக்குகள் எல்லாம் அப்படியேமுடங்கிவிடும்; விலையை ஒரு நொடிப்பொழுதில் டெலிபோன் ஏற்றிவிடும்!

நல்ல முறை விநியோகம் தேவை!

6 அவுன்ஸுக்கு நமக்கு ஜாவா சர்க்கரை கிடைத்துகொண்டிருந்தது. உத்திரப்பிரதேசத்திய உற்பத்தியைப் பெருக்க ஜாவா சர்க்கரை நிறுத்தப்பட்டது. இரண்டரை ரூபாய் கொடுத்து உத்திரப்பிரதேச சர்க்கரை வாங்கென்று நமக்கு உத்திரவிடப்பட்டது. அவ்வளவு பணம் கொடுத்தாலும் சர்க்கரைக்குத் திண்டாட்டம், கிடைக்கவில்லை யென்று கூறினுல் கருப்பட்டி போட்டுக் கொள் என்றுதான் சர்க்கார் கூறுகிறது!

உற்பத்தியைப் பெருக்குவது மட்டும் போகாது; நல்ல முறையில் விநியோகிக்க வேண்டும்; தொழிலாளரின் நலனைப் பெருக்கி, அவர்களை அன்போடு ஆதரவோடு, கேட்டுக்கொள்ளவேண்டும். மே தினத்தில் மக்களிடையே ஜாதிமதபேதங்களாகியபீடைகளையும் ஒழிக்க ஒவ்வொருவரும் வாக்குறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று கூறி திராவிட முன்னேற்றக் கழகப்பொதுச் செயலாளர் தோழர் சி. என்; அண்ணாத்துரை தம்முடைய சொற்பொழிவை முடித்தார்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

6-5-50

புஞ்சைத்தலையூர்:—டி. கே. சீனிவாசன், ஜி. என். ராசு, என். ஈ. பாலகுரு எஸ் அப்பாவு, பராங்குசம், ஆர். சுப்பிரமணியம்.

7-5-50

செண்பகராயநல்லூர்:—சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன்.

கீழ்ச்சந்தைப்பேட்டை:—எஸ். முத்து, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கே. எஸ். ராஜமான், எம் அய்யாச்சாமி.

குன்னூர்:—எஸ். ஆர் சுப்பிரமணியம், ஈ. வெ. கி. சம்பத், ஜி. என். இராசு.

பொள்ளாச்சி:—எம். எஸ் சிவசாமி, இரா சு. தங்கப்பழம்.

8-5-50

வேதாரண்யம்:—சி. பி. சிற்றரசு.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

	ரூ. அ. பை.
முன்வரவு	1855-12—6
வ. உ. சி. படிப்பகம், கோவை	25 0—0
பி. ஆர். ராமகிருஷ்ணன், குணியமுத்தூர்	1-11—9
இரா. புருஷோத்தமன், ,,	1-11—9
த. மாணிக்கம், ,,	1-11—9
பி. மாரியப்பன், கொளத்தூர்	1—0—0
பி சுடலைமுத்து, ,,	1—0-0
ஆர். தங்கராசன், ,,	1—0—0
கு. பரிமளம், ஓசகரை	2—0—0
சு. சண்முகம், உளுந்தூர்பேட்டை	1—6—0
செ. மு. ஹபீ , ,,	1-6—0
பி. ஏ. ஜலீல், ,,	1—6—0
இரா. காசிநாதன், ,,	1—0—0
எம். ஏ. முகம்மது ராவுத்தர் ,,	1—0—0
சி. சொ. முகம்மது யூசுப், ,,	0—8—0
டி. ரத்தினம், சென்னை	1—6—0
எஸ். சுந்தரம், நம்பிநகர்	2—0-0
பூ. பெ. கோவிந்தராஜு, நாகவேடு	0—8—0
வி. சண்முகம், சேலம்	1—0—0
வி. பழனிவேலு ,,	1—0—0
என். கே. பாலசுந்தரம், துறையூர்	10—0—0
த. இராமனுசன், ,,	1—0—0
ஆர். சுப்பிரமணியன் ,,	1—0-0
அ. முனுசாமி, ,,	1-0 0
ஆர். டி. சுப்பிரமணியசாஸ்திரி, ,,	1—0—0
பா. அங்கையன், ,,	1—0—0
தொ. யூ பாலசுந்தரம், ,,	1—0-0
எல். கோபாலகிருஷ்ணன், ,,	1—0—0
ரெ. சோமசுந்தரம், ,,	1—0-0
ரெ பெருமாள், ,,	1-0—0
சி. லிங்கையன், ,,	1 0—0
பி. பெருமாள், சேலம் அம்மாபேட்டை	2-0—0
எஸ். வி நம்மாழ்வார், ,,	1-0—0
கே. கொண்டையா, ,,	5—0—0
எம். பி வள்ளியப்பன், ,,	1—0-0
கே. எஸ். அப்துல் ரஹிம், ,,	1-0-0
ஏ. எல். சௌண்டையா, ,,	1—0-0
ஏ. ஆர். சுப்பையா, ,,	1—0—0
என். வி. கணபதி, ,,	1—0—0
கே. ஏ. தியாகராஜன், ,,	1-0—0
எம். ஆர். சந்திரய்யன், ,,	1—0-0
கே. அப்துல் ஷுகூர், ,,	1—0-0
எம். ஜீவரத்தினம், ,,	1—0—0
கே. எஸ். கந்தசாமி, ,,	3—2—1
சிறுவன் பி. வீரமணி. ,,	0—8—8
ஜே. பி. கோவிந்தன், ஆம்பூர்	4—0—0
எம். எஸ் என். இராசன், தாத்தையங்கார் பேட்டை	2—0—0
சே. வெ. பொன்னுசாமி, கோவை	1—0—0
ஏ. தட்சிணாமூர்த்தி, மதுரை	1—0-0
ஏ. கோன்ஸ்தாந்தேன், புதுவை	5—0-0
பி. வெங்கட்டராமன் சேலம் குகை	1—0-0
கே. கே. ஏ. தாசப்பன், ,,	1—0—0
வி. நமசிவாயம், ,,	1—0—0
ஓ. எஸ். அர்த்தனாரிசாமி, ,,	0—8-0
ஓ. எஸ். ராமலிங்கம் ,,	0—8—0
ஏ. நல்லசாமி, பொள்ளாச்சி	2—0—0
எஸ். உதுப், வில்லாபுரம்	2—0—0
எஸ். கனியப்பன் ,,	1—0—0
ஏ. நடராஜன், ,,	1—0—0
பி. நடராஜன், ,,	1—0—0
வி. டி. மூர்த்தி, ,,	1—0—0
கே எஸ்,எஸ். மணி ,,	1—0—0
ச. மாரியப்பன், விருதுநகர்	2—0—0
எஸ். மகராசன், தூத்துக்குடி,	2—0—0
ஆ. வியாக்கப்பன், ,,	1—0—0
ஆ. நாராயணன், ஆறுமுகநேரி	1—0—0
வி. நடராசன், நாகலாபுரம்	5—0—0
அ காசிராஜன், ரெங்கபாளையம்	1—0-0
கோ. கோவிந்தராஜ், ,,	1-0-0
மு. இருளப்பன், ,,	1-0—0
க. ம. வ. நடராசன், திருமங்கலம்	3—0—0
கே. கே. சாமி, நம்பிநகர்	2—0—0
தா. ஹாகுல் ஹமீது, வெள்ளாழப்பட்டி	1—0 . 0
பி. டி. வி. செட்டியார், பர்கூர்	2—0—0
அ. வேதநாயகம், தூத்துக்குடி	1—0—0
மா. தங்கசாமி, ,,	1—0—0
மா. மாசாணமுத்து, ,,	1—0—0
க. கருப்பசாமி, ,,	1—0—0
தி. மு. க -குளத்தூர் (நெல்லை) கிளை	10—0—0
,, -செடங்கொண்டம் கிளை	10—12—0
	2016-14—6

காஷ்மீர் பிரச்னை பற்றி பி. என். ராவ்

லண்டன், மே 4—

இந்தியாவிலிருந்து இங்கு திரும்பியுள்ள ஐ. நாவின் இந்திய பிரதிநிதி சர். பி. என். ராவ் 'ருனோப்' நிருபருக்களித்த பேட்டியில் காஷ்மீர் பிரச்னைக்குத்திருப்திகரமான முடிவு சீக்கிரமே ஏற்பட்டுவிடும் என்று தான் நம்புவதாகக் கூறினார்.

சிறு பிரதிநிதித்துவ விஷயமாக ஐ. நா.வில் ஏற்பட்டுள்ள தகராறு முதலில் தீரவேண்டியது அவசியமென்றும் ஆனால் பாதுகாப்புக் கௌன்ஸில் மெம்பர் நாடுகள் சிலதன் கொள்கையை மாற்றிக்கொண்டால் ஒழிய இப்பிரச்னை தீர வழி இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

மாஜி இதாலி காலனிகள் விஷயம் ஐ. நா. முன் வந்தபோது இந்தியா மிக முக்கியமானதொரு பங்கெடுத்துக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், ஒரு நாட்டின் விவகாரம்பற்றி ஒரு நாடு மட்டும்தான் சிறந்ததைக் கொள்ளும் என்று நினைப்பது தவறு என்றும் எல்லா நாடுகளுமே சிறந்ததை கொள்ளும் என்றும் கூறினார்.

இவர் மூன்று நாட்கள் இங்கு தங்கியிருந்தபின் லேக்ஸக்ஸஸுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

ஐ. நா. ஏன்றல் செஷனில் தலைமை வகித்த எகிப்திய பிரதிநிதி ருனோப் நிருபரிடம் கூறுகையில் காஷ்மீர் பிரச்னைபற்றி எல்லா ஏற்பாடுகளும் முடிவடைந்தபின், ரஷ்யன் பிரதிநிதி கலந்துகொள்ளாத நிலையில் எந்தக் காரியம் முடியும் என்பது தெரியவில்லை என்று தெரிவித்தார்.

டிரிபோலிடானியாவுக்கு நிர்வாகக் கௌன்ஸில்

டிரிபோலி, மே. 4—

டிரிபோலிடானியாவுக்கு ஒரு நிர்வாகக் கௌன்ஸிலை ஏற்படுத்தியிருப்பதாக அங்குள்ள பிரிட்டிஷ் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். இதில் 9 அரபுகளும், ஒரு யூதரும், ஒரு இதாலியரும் மூன்று நிர்வாக அதிகாரிகளும் இடம் பெறுவர். இதற்குப் பிரதம நிர்வாக அதிகாரி தலைவராக இருப்பார்.

உள்நாட்டு விவகாரங்கள் விஷயமாக பிரிட்டிஷ் நிர்வாகத்தினருக்கு இந்த நிர்வாகக் கௌன்ஸில் யோசனை கூறுமாம்.

இந்தியா இராணுவ பயிற்சிக்கு ஏற்ற இடமாம்!

லண்டன், மே 4—

இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகளை வாபஸ் செய்துவிட்டதால், இதுவரை பிரிட்டிஷ் ராணுவத்தினருக்குக் கிடைத்து வந்த ஆரம்பப்பயிற்சியும் வீரமும் இனி கிடைக்க வசதியில்லாது போய்விட்டது என்று, பிரிட்டிஷ் யுத்த காரியாலய புள்ளி விவர சேகரிப்பு இலாகாவின் தலைவர் லெப்டினெண்ட் ஜெனரல் பிரியான் ஜெரோம் என்பவர் ராணுவச் சஞ்சிகை ஒன்றில் எழுதியுள்ளக் கட்டுரையில் வெளியிட்டிருக்கிறார்.

ராணுவப் பயிற்சிக்கு இந்தியா மிகவும் ஏற்ற இடம் என்றும் ஆசியத் துருப்புகளுக்கு ஒருவர் தலைமை தாங்கிவிட்டால் அவர் நிபுணத்துவமடைந்து விட்டதாகவே கூறலாம் என்றும், அவர் கூறுகிறார்.

இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறம் முன்பு அமைதியின்மை நீடித்து வந்ததால் அதை அடக்கவே பிரிட்டிஷ் துருப்புகள் நல்ல பயிற்சியைப் பெற்று வந்ததாம் இப்போது அந்த வசதி இல்லாது போகவே துருப்புகளை நியூஸ்லாந்து வேல்ஸு, சோமாலிலாந்துக்கும் அனுப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதாகவும் அவர் கூறுகிறார்.

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

கோவையில் மே 27, 28 சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும்

தலைவர்:-புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

திறப்பாளர் :-

நாவலர் ச. சோமசுந்தரபாரதியார்

இரு நாட்களிலும் சி. என். ஏ. குழுவினரின் நாடகங்கள் நடைபெறும்

நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் வில்லுப்பாட்டு அரங்கு நடைபெறும்

இசைவாணர்கள், நடிகர்கள், இயற்றமிழ்புலவர்கள் பலரும் கலந்துகொள்வர்

வரவேற்புக் குழுவினர்

குறிப்பு :-தமிழைக் காத்து, வளர்த்து, அதற்கு ஆக்கந்தேடும் அரும்பணியினை ஆற்றி வர, "இலக்கிய மா மன்றம்" (Literary Academy) என்ற பெரும் மன்றத்தை மாநாட்டில் நிறுவ முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. மா மன்றத்தில் பங்குகொள்ள விரும்பும் தமிழ் இலக்கியப்புலமையுடையோர், கீழ்க்கண்ட முகவரிக்குத் தங்கள் முகவரியுடன் அறிவிக்க வேண்டப்படுகிறார்கள்.

முகவரி :-இரா. நெடுஞ்செழியன், அமைப்பாளர் "இலக்கிய மா மன்றம்" 2-45 முத்துமாரிசெட்டித் தெரு, மண்ணடி, சென்னை.

யூதத் துருப்புகளுக்குப் பயிற்சி

கெய்ரோ, மே. 4—

கிரிய பாலஸ்தீன எல்லையிலுள்ள ஹிக்மா என்ற பகுதியில், யூத துருப்புகளுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டுவருவதாக டமாஸ்கஸ்லிலுள்ள எகிப்திய தூதராலயத்திலிருந்து இங்கு கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

பலவித நவீன ஆயுதங்களை உபயோகிக்க இங்கு கற்றுக்கொடுக்கப்படுகிறதாம், யூதர்களே அதிகக் கனமில்லாத துப்பாக்கி முதலிய ஆயுதவகைகளைச் செய்வதிலும் ஈடுபடுவதாக கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

நடிகர் பிங்கிராஸ்பி

பாரிஸ், மே. 4—

இப்பொழுது விடுமுறையைக் கழிப்பதற்காக பாரிஸ் வந்துள்ள பிரபல நடிகர் பிங்கிராஸ்பி கைது செய்யப்படுவதிலிருந்து தப்பினார். சாம்ஸ் எல்லீஸ் என்ற இடத்தில் அவர் உடலுக்கு இதமாக இருக்கும் சூரிய உஷ்ணத்தை அனுபவிப்பதற்காக அப்படியே படுத்துக் கொண்டாராம். உடனே மூன்று பிரெஞ்சுப் போலீஸ்காரர்கள் அவரை சூழ்ந்துகொண்டு கைது செய்ய வந்துவிட்டனர்.

அவர் எவ்வளவுதான், நான் பிங்கிராஸ்பி என்று சொல்லியும் கேட்பதாக இல்லை. கடைசியில் கோல்வர்கள் சங்கத்தினர் தனக்குக் கொடுத்த மெடலைக் காட்டிய பின் எப்படியோ அவர்களிடமிருந்து அவர் தப்பினார்.

இந்தியா சரியான மார்க்கெட்டாகிறது

லண்டன், மே 4—

இந்தியா பாகிஸ்தான்சென்று விட்டுத் திரும்பியுள்ள பிரிட்டிஷ் கைத்தொழில் பெடரேஷனைச் சேர்ந்த மாரிஸ்டாட் பிரிட்டிஷ் நிருபர்களிடம் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் வர்த்தகநிலைமைபற்றி விளக்கினார். ஜப்பான் ஜெர்மனியின் வர்த்தகப் போட்டி இந்தியாவின் நலமாக இருப்பதைப்புது இவர் எதிர்த்து விளக்குவார் என்று தெரிகிறது.

புதிய புத்தகங்கள்

அண்ணாவின் நூல்கள்:

தோழமையா ? விரோதமா ? 0—4—0

அண்ணாவின் உவமைகள் 0—8—0

வல்லிக்கண்ணன் எழுதியவை :

முத்தம் 0—6—0

அத்தைமகள் 0—4—0

"சேரன்" எழுதிய :

நடிகை நந்தினி 0—4—0

அசோகன் எழுதியவை

கற்புக்கு ஆபத்து ? 0—3—0

இரண்டு கதைகள் 0—8-0

விற்பனைக் கழிவு 25%

அனுப்பும் செலவு இனும்

கிடைக்குமிடம் :—எம். சூரி 14, எ. குப்பையர் தெரு சென்னை-1

சினிமா மலர்

சிலோன், மதுரை, விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், புதுக்கோட்டை, பூனா, ராஜபாளையம், ஈரோடு, அரந்தாங்கி, ஆமதாபாத், தர்மபுரி, கல்கத்தா, கொள்ளேகாலம், லால்குடி, செகந்திராபாத், தனுஷ்கோடி ஆகிய ஊர்களில் டிபாசிட் கட்டக்கூடிய நாணயமுள்ள ஏஜெண்டுகள் தேவை.

"சினிமா மலர்"

மயிலை சென்னை—4

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர் மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரையைத் தருகிறது.

G. பழனியப்ப முதலியார், மதுரை

காதற்பலி

டபிள்யூ.வி. சுந்தரேசன் எழுதிய சிறுகதைத் தொகுதி தனிப்பிரதி விலை அணா நான்கு.

விபரங்களுக்கு : ℅ 'மாலைமணி' 326. சென்னை-1.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.